**கலிகமுவ பிரதேச சபை**
**கேகாலை மாவட்டம்**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 மே 15 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை 2020 ஜுலை 23 திகதி மற்றும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஆகஸ்ட் 20 ஆம் திகதி தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக்கூற்றுகளின் 2019 திசெம்பர் 31 இல் கலிகமுவ பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியில் காணப்பட்ட ரூபா 215,714 ஆன பொறுப்புக்கள் நிதி நிலைமை கூற்றில் காட்டப்படவில்லை. | பொறுப்புக்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | கவனயீனம் காரணமாக மேற்கொள்ள இயலாது போய்யுள்ளதுடன் அக்குறைபாடுகளை சரி செய்து கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதியில் காணி மற்றும் கட்டிட மீதி ரூபா 148,426 குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | நடைமுறையல்லாத சொத்துக்களை சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | உரிய சீராக்கத்தை செய்து சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (இ) | மீளாய்வாண்டிற்குரிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 55,677 குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஆண்டிற்குரிய வருமானத்தை சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | 2019 ஆண்டின் போது சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ஈ) | 2018 ஆண்டு முத்திரை கட்டண அட்டவனை தயாரிப்பதற்காக காணி பதிவாளர் அலுவலகத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 144,100 தொகைக்காக கடன்கொடுனர் ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கவில்லை. | கடந்த ஆண்டிற்குரிய கடன்கொடுனர் ஏற்பாடு கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2018 ஆண்டு முத்திரை கட்டணத்திற்காக காணி பதிவாளர் அலுவலகத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 144,100 தொகையை 2020 ஆண்டு சரி செய்வதாக அறிவிக்கிறேன். |

### 1.4 இணங்காமை

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் பின்வருமாறு

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 571 | 2010 ஆண்டு முதல் 2017 ஆண்டு வரையான காலத்திற்குரிய ரூபா 743,292 ஆன வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | கைத்தொழில்களிற்காக கிடைத்த ரூபா 726,978 பணத்தை வழங்கிய நிறுவனங்களிற்கு மீள் செலுத்த விசாரிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன். |
| (ii) | நிதிப்பிரமாணம் 1646 | சபைக்கு சொந்தமான 08 வாகனங்களுக்குரிய ஓட்ட குறிப்புகள் 2015 ஒக்டோபர் முதல் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | QU-1076 முச்சக்கர வண்டி மற்றும் 2013 ஆண்டு முதல் இது வரை வழங்கப்படாத எஞ்சிய வாகனங்கின் ஓட்டக் குறிப்புகளை எதிர்காலத்தில் வழங்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ஆ) | 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 பந்தி | சபைக்கு சொந்தமான 07 வாகங்களின் எரி பொருள் பரிசீரனை மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | HP-3986 டிரெக்டர் வண்டிக்காக எதிர்காலத்தில் எரி பொருள் பரிசீலனை மேற்கொள்ளப்படும் எனவும் ஏனைய 05 வாகனங்களினதும் எரி பொருள் பரிசீரனை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் அறிவிக்கிறேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 6,333,270 ஆனதுடன், அதற்கு நேர்ரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 12,470,437 ஆனது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2010 ஆண்டிலிருந்து செயலற்று நிலவிவரும் ரூபா 46,582 ஆன வங்கி கணக்கு மீதியொன்றை தீர்க்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | செயலற்ற வங்கி கணக்கை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | செயலற்ற வங்கி கணக்கை தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றதாக அறிவிக்கிறேன். |

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆணடு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 2,501,240 | 2,633,578 | 2,669,017 | 368,035 | 2,461,368 | 2,391,123 | 2,276,462 | 488,169 |
| வாடகை | 5,096,085 | 4,231,854 | 3,734,038 | 542,821 | 5,614,245 | 5,003,541 | 2,923,622 | 525,146 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,200,050 | 1,277,782 | 1,296,332 | - | 900,200 | 900,200 | 1,158,566 | 22,250 |
| ஏனைய வருமானம் | 17,520,074 | 23,278,832 | 40,494,287 | 154,073,493 | 15,093,034 | 15,193,034 | 15,048,029 | - |

#### 2.3.2 வீதவரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் அறவிட வேண்டிய வீதவரி மீதி ரூபா 1,598,504 ஆனதுடன், நிலுவை அறவிடுவது தொடர்பாக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 158 ஆம் பிரிவு | சட்டம் ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | வீதவரி மற்றும் ஏக்கர் வரி உச்ச அளவை அறவிட நடவக்கை எடுத்ததாகவும் வீதவரி புதிய மதிப்பீடொன்றை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அறிவிக்கிறேன். |

பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. வீதவரி அறவிடும் செயற்பாட்டிற்காக சபை அதிகார எல்லையில் அமைந்துள்ள ஆதனங்களை 05 ஆண்டுகளிற்கு ஒரு முறை மதிப்பீடு செய்ய வேண்டிய போதும், 2009 ஆண்டின் பின்னர் ஆதனங்கள் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

**2.3.3 வாடகை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கொட்டியாகும்புற இறைச்சிக் கடையிலிருந்து 2014 ஆண்டிலிருந்து பெறவேண்டிய ரூபா 525,146 இனை அறவிட சட்ட நடவடிக்கை எடுத்திருந்த போதும், குத்தகைக் காரிடம் சொத்துக்கள் இல்லாததால் வழக்கு தீர்ப்பின் பிரகாரம் நிலுவையை அறவிட முடியாதிருந்தது. | நீதிமன்ற கட்டளை ஒன்றை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | வழக்கு தீர்ப்பின் பிரகாரம் பணம் அறவிடப்பட வேண்டிய போதும் அவரிடம் சொத்துக்கள் இல்லை என நீதிமன்றத்திற்கு அறிக்கை செய்யப்பட்டுள்ளது. |

**2.3.4 அனுமதிப்பத்திரக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1988 இன் 56 ஆம் இலக்க மற்றும் 2000 இன் 53 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்திய 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டம் மற்றும் அதன் கீழ் விதிக்கப்பட்ட பிரமாணங்கள் பிரகாரம் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளாத 32 கைத்தொழிகள் தொடர்காக சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதன் காரணமாக ரூபா 128,000 ஆன வருமானமொன்று சபைக்கு இழக்கப்பட்டிருந்ததுடன், குறித்த கைத்தொழிலினூடாக ஏற்பாடும் சுற்றாடல் தாக்கம் தொடர்பாக காலரீதியான மதிப்பீடொன்றை மேற்கொண்டு இருக்கவில்லை. | சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற வேண்டிய அனைத்து நிறுவனங்களிற்கும் முறையாக அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | கள பரிசோதனை ஒன்றை செய்து அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளாத அனைத்து கைத்தொழில்களிற்கும் அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொடுக்க தேவையான நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

### 2.3.5 நீதி மன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2019 திசெம்பர் 31 திகதிக்கு பெற வேண்டியதாக காணப்பட்ட நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 2,819,325 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 20,716,866 ஆனது. | சபைக்கு அறவிட வேண்டிய வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | 2019 மார்ச் மாதம் வரை முத்திரைக் கட்டணம் கிடைத்துள்ளதாகவும் எஞ்சிய பணத்தை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் அறிவிக்கிறேன். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை அதிகார சட்டத்தின் 03 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

#### (அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபை சட்டத்தின் 126 பிரிவின் கீழ் 16 பிரதான விடயங்களை மேற்கொள்வதற்கு உப விதிகள் விதிக்கப்பட வேண்டிய போதிலும் 2019 திசெம்பர் 31 திகதி வரையும் நூலக முகாமைத்துத்திற்காக மாத்திரம் உப விதியொன்று விதிக்கப்பட்டிருந்தது. | உப விதிகளை விதிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | சபையினால் ஏனைய பிரிவுகளிற்குரிய 16 உப விதிகளை தயாரித்து அதன் முன் நடவடிக்கைகளை மேற்கொள்வதாக அறிவிக்கிறேன். |

#### (ஆ) திண்மக் கழிவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபை அதிகார எல்லையில் மலசல கழிவுகளை வெளியிட உரிய இடமொன்று இல்லாததால் வாடிக்கையாளர்களுக்கு கலி சேவையை பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது. | கலி கழிவு சேவையை வழங்கக் கூடிய வகையில் இடவசதிகளை பெற்றுக் கொள்ள வேண்டும். | எதிர்காலத்தில் போதிய இடவசதிகளை பெற்று பொது மக்களிற்கு கலி சேவையை வழங்க நடவடிக்கை எடுக்கிறேன். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறமையின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபை பிரதான அமைச்சு ஒதுக்கீட்டின் மீது செயற்படுத்தப்பட்ட கைதொழில்களிற்காக 2014 ஆண்டினுள் இரண்டு சந்தர்ப்பங்களில் கிடைத்திருந்த ரூபா 726,978 இனை குறித்த வேலைகள் உரிய முறைப்படி பூர்த்தி செய்யப்பட்டிருக்காததால் மீளாய்வாண்டு இறுதி வரையும் பொது வைப்புக் கணக்கில் நிருத்தி வைக்கப்பட்டிருந்தது. | கிடைத்த ஒதுக்கீட்டிலிருந்து உச்ச பயனை பெற்று குறித்த வேலைகளை உரிய முறைப்படி பூர்த்தி செய்ய வேண்டும். | ரூபா 726,978 பணத்தை குறித்த நிறுவனத்திற்கு மீண்டும் அனுப்ப விசாரித்துள்ளதாகவும், ரூபா 187,195 இனை வருமானத்திற்கு எடுக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக அறிவிக்கிறேன். |

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.3.1 சொத்துக்கள் ஆவணப்படுத்தப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான காணி கட்டிடங்கள் மற்றும் அவற்றின் பெறுமதிகளை இனங்கண்டு ஆவணப்படுத்தி இருக்கவில்லை. | சபைக்கு சொந்தமான அனைத்து சொத்துக்களையும் ஆவணப்படுத்த வேண்டும். | சொத்துக்களை இனங்காணல் மற்றும் பதிவேடுகளை நாளாதுவரையாக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

### 3.3.2 சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பதிவுரிமை இன்றி சபையினால் பயன்படுத்தப்படும் வாகனமொன்றை சுவீகரிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வாகனங்களின் உரிமையை சுவீகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | சுவீகரித்துக் கொள்ள தேவையான நடவடிக்கை எடுத்துக் கொண்டிருப்பதாக அறிவிக்கிறேன். |

### 3.3.3 பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2014 ஆண்டு மற்றும் அதற்கு முன்னரிலிருந்து ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்ட பெறுமதி ரூபா 540,900 ஆன 02 டெக்டர் வண்டிகள் மற்றும் ஒரு மோடார் சைக்கிளை பழுதுபார்த்து பயன்படுத்த அல்லது முறையாக பராதீனம் செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | குறித்த நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ள வேண்டும். | மோடார் வாகன பரிசோதகரிற்கு முன்வைத்து கிடைக்கும் பரிந்துரைகளின் மீதி தேவையான தீர்மானங்களை எடுக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

### 3.4 பெறுகைகள்

**பெறுகைகள் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டினுள் ரூபா 9,055,727 ஆன பெறுகைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போது பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். | 2020 ஆண்டிற்காக பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன். |